செ.வெ.எண் -12 நாள்: 08.07.2019

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டப்பணிகள் ரூ.246 இலட்சம் மதிப்பில் 12 பணிகள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை மருதையாறு வடிநிலக்கோட்டம் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் குடிமாமரத்து பணிகளுக்கான அரியலூர் மாவட்ட பாசனதாரர்கள் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (08.07.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டம் 2019-20 ஆண்டிற்கான பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரியலூர் மாவட்டத்தில் மருதையாறு வடிநில கோட்டம் அரியலூர் மூலம் அயன் ஆத்தூர் உடையான் ஏரி ரூ.15 இலட்சம் மதிப்பிலும், அயன் ஆத்தூர் பெரிய ஏரி ரூ.24 இலட்சம் மதிப்பிலும், விளாங்குடி ஓடை அணைக்கட்டு ரூ.29.50 இலட்சம் மதிப்பிலும், பொய்யூர் கல்லார் ஓடை அணைக்கட்டு ரூ.29.50 இலட்சம் மதிப்பிலும், கல்லக்குடி பெரிய ஏரி ரூ.25 இலட்சம் மதிப்பிலும், அருங்கால் ஓடை அணைக்கட்டு ரூ.18 இலட்சம் மதிப்பிலும், மல்லூர் நைனேரி ரூ.20 இலட்சம் மதிப்பிலும், மல்லூர் மணிவாசகர் ஓடை அணைக்கட்டு ரூ.12 இலட்சம் மதிப்பிலும், குருவாலப்பர் கோவில் பொன்னேரி ரூ.20 இலட்சம் மதிப்பிலும், சித்தமல்லி அணை ரூ.28 இலட்சம் மதிப்பிலும் ஆகமொத்தம் 10 புனரமைப்பு பணிகளுக்கு ரூ.221 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் தற்போது 9 பாசனதாரர்கள் சங்கம் அமைக்கப்பட்டு 9 பணிகள் துவங்கப்பட்டு, கரைகள் பலப்படுத்துதல், சட்டர் பழுதுபார்த்தல் போன்ற புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. 1 பணிக்கு பாசனதாரர்கள் சங்கம் தேர்வு செய்யும் பணி இன்று நடைபெறவுள்ளது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம் திருச்சி மூலம் புள்ளம்பாடி பிரதான கால்வாய் மைல் 33/5 முதல் 35/2, 38/5 முதல் 40/1, 45/4 முதல் 46/0 வரை தூர்வாருதல் ரூ.13 இலட்சம் மதிப்பிலும், புள்ளம்பாடி பிரதான கால்வாய் மைல் 47/2 முதல் 48/1, 48/2 முதல் 49/5, 50/4 முதல் 51/2 வரை தூர்வாருதல் ரூ.12 இலட்சம் மதிப்பிலும் என 10.6 கிலோமீட்டர் வரை 2 தூர்வாருதல் பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் நடைபெறவுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ளவுள்ள பாசனதாரர்கள் சங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதனடிப்படையில், 12 பணிகள் மேற்கொள்ளவுள்ள 12 சங்கங்களைச் சார்ந்த பாசனதாரர்களுக்கு பணிகள் குறித்து வழிகாட்டும் நெறிமுறைகளை விளக்கிடவும், பணிகள் குறித்து கலந்துரையாடவும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் அந்தந்த பாசனதாரர்கள் சங்கம் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், அரசு வழிகாட்டியுள்ள நெறிமுறைகளை பின்பற்றி பணிகள் தரமாக செய்யப்பட வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பேற்க நேரிடும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர் ராஜன், செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை, நீ.வ.ஆ) டி.தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்கள் சாந்தி, வை.வேல்முருகன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பழனிசாமி, வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர்கள், நிலஅளவைத்துறை அலுவலர், பதிவுத்துறை மற்றும் மாவட்ட பாசனதாரர்கள் சங்கத்தினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**